1975 அக்டோபர் 24]

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க் கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு வழக்கமான குற்றவாளிகளைக் கட்டுப்படுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1975).

(2) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, நகரத் தொல்லைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1975).

(3) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, ஹோமியோபதி முறை மருத்துவம் ஹோமியோபதி மருத்துவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1975).

(4) தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 26/1975).

(5) 1975 ஆம் ஆண்டு, மோட்டார் போக்குவரத்துப் பணியாளர்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1975).

(4) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு இரு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களால் மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு விதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் இரு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறுவதற்கு கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் பெற்றுக் கொள்வதற்கான கடைசி நாளும் நேரமும்	27—10—1975 பிற்பகல் 5 மணி.
வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல் ..	27—10—1975 பிற்பகல் 5-30 மணி.
வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும்	28—10—1975 பிற்பகல் 5 மணி.

நியமனப் படிவங்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு பேருக்கு மேற்படின், தேர்தல் ஒன்று நடைபெறும். தேர்தல் ஏதும் இருப்பின், வாக்குப் பதிவு நடைபெறும் நாளும் நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

3. மாற்றுத் தலைவர் பட்டியல்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளின் 6-வது விதியின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட மேலவையின் 51-வது கூட்டத் தொடருக்கு, கீழ்க்காணும் உறுப்பினர்களை, மேலவை மாற்றுத் தலைவர் பட்டியலில் இடம் பெறுமாறு மேலவைத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார் என்பதை அவைக்கு அறிவிக்கிறேன்.

1. திரு. மு. இராமநாதன்;
2. திரு. எல். பலராமன்;
3. திரு. எஸ். நாராயணசாமி;
4. திரு. பி. ஆர். தாமஸ்.

4. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

என்று முன்மொழிகிறேன்.

@ 126 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.